Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC. No. 92 / 2020

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.9**

| | | | |
|---|---|---|---|
| Name: | சந்திரசேகர் | Calling: | காவல் துணை கண்காணிப்பாளர், ஓய்வு |
| Father's Name: | பாலகிருஷ்ணன் | Religion: | |
| Village: | திருவண்ணாமலை | Age: | 61 |
| Taluk: | திருவண்ணாமலை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 13.08.2026. நேரம்: 03.39 PM

(எதிரி ஆஜர். எதிரி விசாரணையின் போது நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.)( இந்த வழக்கில் 1 ம் எதிரி நவித் என்பவருக்கு எதிராக வழக்கு பிரித்தெடுக்கப்பட்டு CC 286/2025 என நிலுவையில் இருந்து வருகிறது.)

அ.சா. 9 முதன்மை விசாரணை

( நான் இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. முரளிதரண் என்பவருக்காக சேர்த்து சாட்சியம் அளிக்கவும், அவர் தயாரித்த ஆவணங்களை இந்த சாட்சியம் மூலம் குறியீடு செய்யவும் எதிரி தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. )

நான் திருவண்ணாமலை நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிப்புரிந்து ஓய்வு பெற்றேன். நான் கடந்த 09.04.2019 ம் ஆண்டு வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது வாணியம்பாடி காதர்பேட்டை ஆசிரியர் நகரை சேர்ந்த நசீர் அகமது மகன் நியாஸ் அகமது என்பவர் நிலையம்

ஆஜராகி கொடுத்த புகாரை காவல் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. முரளிதரண் என்பவர் பெற்று அதன்தன்மைக்கு ஏற்ப வாணியம்பாடி நகர காவல் நிலைய குற்ற எண் 162/2019 சட்டப்பிரிவுகள் 457,380 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வைத்திருந்தார். **முதல் தகவல் அறிக்கை அதசாஆ 15 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டார்.

பின்னர் நான் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 09.04.2019 ம் தேதி காலை 09.30 மணிக்கு நியாஸ் அகமது என்பவரது வீட்டில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சரவணன் மற்றும் பாண்டுரங்கன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 16 மற்றும் அதசாஆ 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் நியாஸ் அகமது, முகமது ஜாக்கி, முகமத் அலி, செல்வகுமார், சரவணன், பாண்டுரங்கன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் எனது விசாரணையில் இருந்தும், சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்தது. இது சம்மந்தமாக எதிரிகள் மற்றும் வழக்கு சொத்தை கண்டுபிடிக்கவேண்டி வாணியம்பாடி காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டு உள்ளூர் செய்முறை குற்றவாளிகளின் பட்டியல் தயார் செய்து தணிக்கை செய்யப்பட்டது. மேலும் மாவட்ட டிசிஆர்பி செய்முறை குற்றவாளிகளின் பட்டியல் பெற்று தணிக்கை செய்தும் பல இடங்களில் தேடியும் புலன் வைக்கப்பட்டது. 13.04.2019 ம் தேதி இவ்வழக்கு சம்மந்தமாக 15.00 மணிக்கு வாணியம்பாடி பாலாற்றில் உள்ள முனிஸ்வரின் கோவில் ஆற்றங்கரை அருகில் கண்காணித்துக்கொண்டிருந்த போது சந்தேக எதிரிகளான நவித் மற்றும் அஸ்கர் அலி ஆகியோர்களை அடையாளம் கண்டு காரணம் கூறி அங்கு வந்த சாட்சிகள் முகமது அலி மற்றும் முகமது அஸ்லாம் ஆகியோர் முன்னிலையில் காரணம் கூறி கைது செய்து விசாரிக்க நவித் என்பவர் எந்த வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். 15.10 மணிக்கு அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். **நவித் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ**

**18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி நவித் தானும் அஸ்கர் அலியும் சேர்ந்து தான் ஆசிரியர் நகரில் உள்ள நியாஸ் அகமது வீட்டில் பின்பக்க கதவை உடைத்து அந்த வீட்டில் உள்ள நகைகள் மற்றும் விலை உயர்ந்த வாட்சுகள் மற்றும் பணம் ரூ.20 ஆயிரத்தை திருடி கொண்டு சென்றோம் என்றும் அதை நாங்கள்இருவரும் பிரித்துக்கொண்டோம் என்றும் என்னை அழைத்து சென்றால் நாங்கள் திருடிய வீட்டையும், மேலும் திருடிய பொருள்கள் வாட்ச், கேமரா, நகைகள் மற்றும் தங்க நகைகள் ஆகியவற்றை முனிஸ்வரன் கோவில் அருகே பதுக்கி வைத்திருப்பதை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர்செய்வதாக கூறினார். பின்பு 16.00 மணிக்கு அஸ்கர் அலியை விசாரிக்க அதே சாட்சிகள் முன்னிலையில் எந்த வித அச்சுறுத்தலும் , துன்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். **அஸ்கர் அலியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கபட்ட பகுதி அ.த.சா.ஆ 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் நவித் என்பவரும் சேர்ந்துதான் ஆசிரியர் நகரில் உள்ள நியாஸ் அகமது வீட்டை பின்பக்கமாக சென்று பின்கதவை உடைத்து உள்ளே சென்று வீட்டிற்குள் பீரோவில் இருந்த நகைகள் மற்றும் வாட்ச், தங்க நகைகள், கேமராக்கள் ஆகியவற்றை திருடி சென்றோம் என்று ஒப்புக்கொண்டு தன்னை அழைத்து சென்றால் நவித் தனக்கு பங்காக கொடுத்த நகைகளை எடுத்து சென்று வைத்த இடமான வாணியம்பாடி செக் டேம் அருகே மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். இதன் படி சுமார் 17.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் நவித் என்பவர் தான் மறைத்து வைத்திருந்த நகைகளான தங்க வளையல் ஒரு ஜதை 17.900 கிராம், சிறிய தங்க காசு இரண்டு –1 கிராம், கல் வைத்த வைர மோதிரம் 4.100 மிகி, சிறிய டாலர் ஒன்று –2.200 மிகி, சங்குமாடல் வைர கம்பல் ஒரு ஜதை – 2.750 மிகி, குழந்தை மோதிரம் இரண்டு , நிக்கா கேமரா உறையுடன் ஒன்று, ஒமேகா லேடிஸ் வாட்ச் ஒன்று, டிசாரட் லேடிஸ் வாட்ச் ஒன்று கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **17.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 18.00 மணிக்கு வாணியம்பாடி நகர பாலாற்றில் உள்ள செக்டேம் அருகில் உள்ள முட்புதரில் இருந்து அஸ்கர் அலி எடுத்து ஆஜர் செய்த தங்க காசு, கல்வைத்த வைர கம்பல் –1 ஜதை, பேன்சி டாலர்செயின், பேன்சி கம்பல் –1 ஜதை, ஒத்த கம்பல்ஒன்று –1.750 மிகி, ஒத்தகம்பல் ஒன்று சுமார் 0.870 மிலி, கல்வைத்த கவரிங் மோதிரம் ஒன்று, வாட்ச் போன்றவை அடங்கி எதிரி எடுத்து ஆஜர் செய்த 19 வகையான பொருட்களை அதே

சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார்செய்தேன். **18.00 மணியிட்ட கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துகளுடன் நிலையம் சேர்ந்து எதிரிகளுக்கு திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்படைத்தேன். மேலும் எதிரிகளின் கைரேகை நிபுணர்களுக்கு ஆய்வு செய்ய வேண்டி மேலும் குற்ற வழக்குகளில் ஈடுப்பட்டுள்ளனரா என்று விசாரிக்க வேண்டியுள்ளதால் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பிறகு முபாரக் த/பெ ரசீத் என்பவர் காவல் நிலையம் ஆஜராகி தான் நவித் என்பவர் தனக்கு நண்பர் என்றும் அவரிடம் தான் குடும்பத்தில் கஷ்டமாக உள்ளது என்றும் குடும்ப செலவிற்காக கடனாக பணம் கேட்டதாகவும் அதற்கு நவித் பணம் எதுவும் இல்லை, ஆனால் தன்னுடைய அம்மாவின் செயின் உள்ளது அதை வேண்டுமானால் கொடுக்கிறேன், அதை வேண்டுமானால் அடைமானம்வைத்து பணம் பெற்றுக்கொள் என்று கொடுத்தார் என்றும் அதன் படி தான் நகையை அடைமானம் வைத்து பணம் பெற்று குடும்ப செலவை பார்த்து வந்தேன் என்றும் நவித் சிறைக்கு சென்றதை கேள்விப்பட்டு அவர் திருடிதான் நகைகளை கொடுத்துள்ளார் என்றும் அவர் திருடுவார் என்பது தெரியாது என்றும் கூறி தான் அவரிடம் பெற்ற நகையை ஆஜர் செய்த டெல்லிகட்டின் பவுன் செயின் ஒன்று அதன் எடை சுமார் 15.900 கிராம் அடங்கிய நகையை சாட்சிகள் அனிஷ் அகமது மற்றும் அஜ்மத் உல்லா ஆகியோர் முன்னிலையில் 20.05.2019 ம் தேதி 14.30 மணிக்கு கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **20.05.2019 ம் தேதி 14.30 மணியிட்ட கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மூன்று கைப்பற்றுதல் மகசர்களில் கைப்பற்றிய வழக்கு சொத்துகளை தனித்தனியாக மூன்று படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். **அந்த மூன்று படிவம் 91 கள் முறையே அ.த.சா.ஆ 23–25 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சாட்சிகள் முகமது அலி, முகமது அஸ்லாம், முபாரக், ஹனிஷ் அகமது , அம்ஜத்துல்லா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 457,380 படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்துக்கொண்டேன். நான் விசாரித்த சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரருக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். புகார் கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகாரில் காணாமல் போன நகைகளை குறித்து அடையாளம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகாரில் பணம் எவ்வளவு காணாமல் போனது என்பது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ஆசிரியர் நகர் என்பது மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். எப்போது காணாமல் போனது என்பது குறித்து குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் 08 ம் தேதி ஊருக்கு போனவர்கள் வந்து இரவு 11.00 மணிக்கு பார்த்த போது தான் நகைகள் காணாமல் போனதால் அதன்பிறகு புகார் கொடுத்தார்கள். வீட்டின் கதவு உடைந்திருந்தை குறித்து தனிநபர் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த நகைகள் புகார்தாரருக்கு சொந்தமானது என்பதற்கான நகை ரசீது ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. அவர் சென்னைக்கு போய் வந்ததற்கான ஆதாரம் என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. அ.சா.1 நகைகள் காணாமல் போனதாக காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தபிறகு நகைகள் கிடைத்த பிறகு தகவல் சொல்வதாக கூறி அனுப்பியதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் மகசர் சாட்சிகள் வழக்கு குறித்து எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் கணினி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் சம்பவம் இடம் செல்லாமல் எதிரியின் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 நகையை அடைமானம் வைத்த மறைத்து தன் குடும்பத்தாருக்கு தெரியகூடாது என அவர் நினைத்து அவர் கொடுத்த பொய் புகாரினை பெற்று எதிரியின் மீது தவறான ஒரு வழக்கை பதிவு செய்து இறுதி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் இடத்தில் சொல்லும் நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எந்த ஒரு வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. புள்ளியல் விவரத்திற்காக போடப்பட்ட வழக்கில் எதிரியின் மீது ஒரு தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சந்திரசேகர்

SRIPATHI K

SRIPATHI K
2026.08.14
14:36:55
+0530